### தமிழ்நாட்டின் உரிமைகள் — நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

### தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு! (23.7.2025)



## இராமேஸ்வரத்துக்கு கூடுதலாக ரயில்கள் விடப் படுமா?

### மக்களவையில் - கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி!



புதுடெல்லி,ஜூலை.25-

அண்மையில் பாம்பன் கடல் பகுதியில் புதிய இரயில் பாலத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார். ஏற்கனவே இருந்த, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட பாலம் பழைமையின் காரணமாக வலுவிழந்த காரணமாக புதிய இரயில் பாலம் கட்டப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் காலப் பாலம் போல புதிய இரயில் பாலமும் அடியில் கப்பல்கள் இடையூறின்றி செல்ல ஏதுவாக, லிஃப்ட் போல், உயர்த்தி இறக்கும் வசதிகளுடன் அமைக்கப் பட்டுள்ளது. புதிய பாம்பன் இரயில் பாலம் திறக்கப் பட்ட பின் இராமேஸ்வரம் வரை முன்னர் இருந்தது போல இரயில் போக்குவரத்து தொடங்கப் பட்டுள்ளது.

**எந்தெந்த நகரங்களுக்கு புதிய இரயில்கள் இயக்கம்?**

இந்நிலையில், பல்லாயிரம் சுற்றுலாப் பயணிகளும் பிரசித்திபெற்ற இராமேஸ்வரம் கோயிலுக்கு இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு ஊர்களில் இருந்தும் பக்தர்கள் வந்து செல்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு பயணிகள் இரயில் சேவைகள் எண்ணிக்கை அதிகரிக்கப் படுமா? தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் இந்தியாவின் பிற மாநிலங்களில் உள்ள நகர்களுக்கும் புதிய எக்ஸ்பிரஸ் இரயில்கள் இயக்கப் படுகின்றனவா?

**தூக்கு பாலத்தின் பழுதுகள் தீர்க்கப் பட்டதா?**

மேலும், பாம்பன் புதிய தூக்கு பாலம் இயக்கத்துக்கு வந்த உடனேயே தொழில்நுட்ப சிக்கல் காரணமாக பழுதடைந்து பல நாட்கள் இயக்க முடியாமல் இருந்ததா? தற்பொழுது, பழுது தான் சரிசெய்யப் பட்டு தூக்கு பாலத்தின் அடியில் கப்பல்கள் இடையூறின்றி செல்கின்றனவா? அப்படியானால் இவற்றின் விவரங்கள் என்ன? என்று கேட்டு இரயில்வே அமைச்சரிடம் திமுக நாடாளுமன்ற மக்களவைக் குழுத்தலைவர் டி.ஆர்.பாலு வினா எழுப்பி இருந்தார்.

**ஒன்றிய இரயில்வே அமைச்சர் அஸ்வினி குமார் வைஷ்ணவ் பதில்.**

**இந்த கேள்விக்கு ஒன்றிய இரயில்வே அமைச்சர் அளித்த பதில் பின் வருமாறு:**

**தாம்பரம்- இராமேஸ்வரம் புதிய எக்ஸ்பிரஸ்.**

" இராமேஸ்வரம் செல்லும் இரயில் பயணிகளின் தேவையை கருத்தில் கொண்டு புதிதாக தாம்பரம்- இராமேஸ்வரம் இடையே தினசரி எக்ஸ்பிரஸ் இரயில் சென்ற 6.4.2025 முதல் இயக்கப் படுகிறது. மேலும், ஏற்கனவே இராமேஸ்வரத்துக்கு மொத்தம் 28 இரயில்வண்டி சேவைகள் உள்ளன. இவை , சென்னை, கோயம்புத்தூர்,கன்னியாகுமரி, திருப்பதி, அயோத்தி, வாரணாசி (காசி), பிரயாக்ராஜ் ( அலகாபாத்),புவனேஸ்வரம் உள்ளிட்ட பல்வேறு நகரங்களை இராமேஸ்வரத்துடன் இணைக்கின்றன. மேலும், தமிழ்நாடு எல்லைக்கு அப்பால் உள்ள பல்வேறு மாநில இரயில்பாதைகளின் வலையமைப்புடன் இராமேஸ்வரம் இரயில்பாதை இணைந்திருப்பதால் பயணியர் சேவைக்கான தேவைகள், இரயில்பாதைகள் மற்றும் இரயில்வண்டிகளின் இயக்கம்சார் சாத்தியக்கூறுகள், நிதி உள்ளிட்ட ஆதாரங்களின் அடிப்படையில் புதிய இரயில்கள் விடுவது குறித்த முடிவுகளை "இந்திய ரயில்வே" நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

பாம்பன் கடல்பகுதியில் உள்ள இரயில் பாதை தூக்கு பாலம் எந்த கோளாறும் இன்றி கப்பல் போக்குவரத்துக்கு வசதியாக செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு ஒன்றிய இரயில்வே அமைச்சர் அஸ்வினி குமார் வைஷ்ணவ், டி.ஆர்.பாலு எம்.பி.க்கு நேற்று முன்தினம் (23.7.2025) மக்களவையில் தெரிவித்துள்ளார்.

## தூத்துக்குடி-மும்பைக்கு புதிய ரயில் எப்போது?

### மக்களவையில் — நாடாளுமன்ற கழகக்குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!



புதுடெல்லி,ஜூலை.25-

**திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவரும், தூத்துக்குடி மக்களவை உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி 23-7-25 அன்று எழுத்துப் பூர்வமான கேள்விகளை ரயில்வே அமைச்சரிடம் எழுப்பினார்.**

"தூத்துக்குடிக்கும் மும்பைக்கும் இடையே மேம்படுத்தப்பட்ட ரயில்வே இணைப்புக்கான முக்கியத்துவம் வாய்ந்த தேவை இருப்பதை ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா... இதன் அடிப்படையில் லோக்மான்ய திலக் எக்ஸ்பிரசை (ரயில் எண். 11043/11044) தூத்துக்குடிக்கு நீட்டிப்பதன் மூலமோ அல்லது புதிய நேரடி ரயில் சேவையை அறிமுகப்படுத்துவதன் மூலமோ இத் தேவையை நிறைவேற்ற ஒன்றிய அரசு முனைந்திருக்கிறதா?

இந்த சேவை அறிமுகப்படுத்தப்படுவதற்கு கால நிர்ணயம் ஏதும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?

தூத்துக்குடிக்கு ரயில் இணைப்பை மேம்படுத்த வேறு ஏதேனும் நடவடிக்கைகளை எடுக்க அரசு திட்டமிட்டுள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?" ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்பி எழுப்பினார்.

இக்கேள்விகளுக்கு ஒன்றிய ரயில்வே, தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்த பதிலில்,

"தற்போது, மும்பை - தூத்துக்குடிக்கு இடையே 19567/19568 எண் கொண்ட தூத்துக்குடி - ஓகா விவேக் எக்ஸ்பிரஸ் சேவை இயக்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி பயணிகளின் வசதிக்காக, இந்திய ரயில்வே 19.07.2024 முதல் வாரத்திற்கு இரு முறை இயக்கப்படும் 16765/16766 மேட்டுப்பாளையம் -தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ரயிலை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

மேலும், திருநெல்வேலி - பாலக்காடு பாலருவி எக்ஸ்பிரஸ் (16791/16792) சேவை 15.08.2024 முதல் தூத்துக்குடி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது தவிர போக்குவரத்து தேவைகள், செயல்பாட்டு சாத்தியக் கூறுகள், திட்டத்துக்கு தேவையான வளங்கள் கிடைக்கும் தன்மை ஆகியவற்றைப் பொறுத்து , புதிய ரயில்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் ரயில் சேவைகளை நீட்டித்தல் ஆகியவை ரயில்வேயில் தொடர்ந்து நடைபெற்று வரும் செயல்முறைகளாகும்" என்று ஒன்றிய ரயில்வே அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாட்டில் செமிகண்டக்டர் உற்பத்தியை ஊக்குவிக்க

## அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

### மக்களவையில் — தயாநிதி மாறன் கேள்வி!



புதுடெல்லி, ஜூலை.25-

செமிகண்டக்டர் High-tech Park திட்டத்தின் சீரமைப்பு பணிகள் உட்பட, செமிகண்டக்டர் குறித்தான கேள்விகளை எழுப்பியுள்ளார், தயாநிதி மாறன் எம்.பி. எலக்ட்ரானிக் பொருட்களில் தரவுகளை சேகரிக்கும் முக்கிய பகுதியாக இருக்கும் செமிகண்டக்டர், தென்கொரியா, அமெரிக்கா, சீனா, ஜெர்மனி, ஜப்பான், தைவான், இஸ்ரேல் போன்ற நாடுகளில் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு அரசு சார்பாக வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க மேற்கொண்ட முன்னெடுப்பின் விளைவாக, முதல் செமிகண்டக்டர் உற்பத்தி இயந்திரம் வடிவமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் முதல் செமிகண்டக்டர் உற்பத்தி இயந்திரத்தை உருவாக்கிய பெருமை தமிழ்நாட்டையே சேரும். ஒன்றிய அமைச்சரே தமிழ்நாடு முக்கிய மின்னணு உற்பத்தி மையமாக வளர்ந்து வருவதாக சொல்லியிருக்கிறார்.

இந்த நிலையில், செமிகண்டக்டர் உற்பத்தி திட்டங்கள் பற்றிய விவரங்களுக்கு ஒன்றிய அரசு விரிவாக பதிலளிக்க வேண்டுமென, கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.தயாநிதி மாறன் அவர்கள் ஒன்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திடம் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு :-

இந்திய செமிகண்டக்டர் இயக்கத்தின்கீழ் நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அல்லது பரிசீலனையில் உள்ள செமிகண்டக்டர் உற்பத்தி திட்டங்களின் விவரங்கள் என்ன?

2030 ஆம் ஆண்டுக்குள் 200,000 திறமையான செமிகண்டக்டர்கள் தயாரிக்கும் நிபுணர்களை உருவாக்குவதை இலக்காகக் கொண்ட தமிழ்நாடு அரசின் செமிகண்டக்டர் மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் கொள்கைக்கு (2024) உதவிடும் வகையில் ஒன்றிய அரசின், விரிவாக்கம் செய்த தொழில்நுட்ப மற்றும் நிதி உதவி குறித்த விவரங்கள் என்ன? என கேள்வி எழுப்பினார்.

10 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள மின்னணு உற்பத்திக்கான ஒன்றிய அரசின் PLI திட்டங்களையும், தமிழ்நாட்டின் ரூ.25,600 கோடிக்கும் அதிகமான முதலீடு களுடன் திட்டமிடப்ப ட்டுள்ள செமிகண்டக்டர் High-tech Park திட்டங்களையும் ஒருங்கிணைக்கும் நோக்கம் உள்ளதா? எனில் அதன் விவரங்கள் என்ன? என கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் செமிகண்டக்டர் வடிவமைப்பதற்கான உட்கட்டமைப்பை உருவாக்குவதற்காக ஒன்றிய அரசின் ஆராய்ச்சி நிறுவனத்தின் வடிவமைப்பு சார்ந்த ஊக்கத்தொகைத் திட்டத்தின்கீழ் (DLI) வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவிகள் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என கேள்வி எழுப்பினார்.

தேசிய திறன் மேம்பாட்டு இயக்கத்தின்கீழ், தமிழ்நாடு அரசின் செமிகண்டக்டர் உற்பத்தி இலக்குகளை ஊக்குவிக்கும் வகையில், ஒன்றிய அரசால் தொடங்கப்பட்ட பணியாளர் மேம்பாடு மற்றும் திறன் சான்றிதழ் திட்டங்களின் விவரங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.

### கடந்த பத்தாண்டுகளில். மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ள,

## தேசிய பேரிடர் நிவாரண நிதி விவரங்களை ஒன்றிய அரசு அளிக்க இயலுமா?

### மக்களவையில் — டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி,ஜூலை.25-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 22 சூலை 2025 அன்று மக்களவையில், வெவ்வேறு மாநில அரசுகளுக்கு. கடந்த பத்தாண்டுகளில் வழங்கப்பட்டுள்ள, தேசிய பேரிடர் நிவாரண நிதி விவரங்களை, ஒன்றிய அரசு அளிக்க முடியுமா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயுலுமா? என்றும் ஒன்றிய அரசின் உள்துறை இணையமைச்சர் நிதியானந்த் ராய் அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் உள்துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு :-

தேசிய மேலாண்மை கொள்கையின்படி, இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி அளித்திட அந்தந்த மாநில அரசுகளக்கு முழுப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும், இதற்கான மாநில பேரிடர் நிவாரண நிதியத்தின் கீழ், கடந்த பத்தாண்டுகளில் 28 மாநிலங்களுக்கு ரூபாய் 51,731 கோடிகள் வழங்கப்பட்டுள்ளது என்றும், தமிழ் நாட்டிற்கென ரூபாய் 3078 கோடிகள் அளவிற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும் மாநில அரசுகளின் முயற்சிகளை மேம்படுத்தும் வகையில் உதவி செய்யும் வகையிலும் தேசிய பேரிடர் நிவாரண நிதியத்திலிருந்தும் கடந்த பத்தாண்டுகளில் 28 மாநிலங்களுக்கு ரூபாய் 83,756 கோடிகள் அளிக்கப்பட்டுள்ளது என்றும், தமிழ் நாட்டிற்கென ரூபாய் 5276 கோடிகள் அளிவற்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது என்றும், அனைத்து அமைச்சகங்களையும் சேர்ந்த பிரதிநிதிக் குழு ஆய்வு செய்த பின்னரே, இ;த்தொகை கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது என்று ஒன்றிய அரசின் உள்துறை இணையமைச்சர் நிதியானந்த் ராய் அவர்கள்;, மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு பதிலை அளித்துள்ளார்.

### ஈரோட்டில் மிக வேகமாக அழியத் தொடங்கும் நெசவுத்தொழில்

## ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### மக்களவையில் கே.இ.பிரகாஷ் கேட்ட கேள்விக்கு கிடைத்த அதிர்ச்சி புள்ளிவிவரம்!



புதுடெல்லி, ஜூலை.25–

தமிழ்நாட்டின் நெசவு தலைநகரமான ஈரோடு தற்போது கடுமையான சிக்கலில் உள்ளது. ஈரோட்டில் பொருளாதரத்திற்கு முதுகெலும்பாகவுள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவுத் தொழில்கள் கடந்த சில ஆண்டுகளாக பெரும் வீழ்ச்சியை சந்தித்துள்ளன. இந்த வீழ்ச்சி வெறும் புள்ளி விவரம் மட்டுமல்ல; ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் ஈரோட்டின் அடையாளத்தையும் கேள்விக்குறியாகி உள்ளது.

மக்களவையில் ஒன்றிய ஜவுளித்துறை அமைச்சர் கிரிராஜ் சிங்கிடம் கடந்த மூன்று ஆண்டுகளில் ஈரோடு நாடாளுமன்ற தொகுதியின் இயக்கத்தில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறிகளின் எண்ணிக்கை, மூடப்பட்ட கைத்தறி மற்றும் விசைத்தறிகளின் எண்ணிக்கை, இதனால் இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் நெசவு உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றம் குறித்த தரவுகளை கேட்டு நான் கேள்வி எழுப்பினேன்.

இதற்கு பதிலாக: ஈரோடு நாடாளுமன்ற தொகுதியில் கடந்த மூன்று ஆண்டுகளாக இயக்கத்தில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறிகளின் எண்ணிக்கையை மட்டும் ஒன்றிய ஜவுளித்துறை அமைச்சகம் அளித்துள்ளது அதன்படி

*கைத்தறிகளின் எண்ணிக்கை 33,022லிருந்து 29293 ஆக குறைந்துள்ளது.

*விசைத்தறிகளின் எண்ணிக்கை 15,897லிருந்து 11,911 ஆக குறைந்துள்ளது.

இந்த குறைவு பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கையையும், வேலை தேடி வேறு இடங்களுக்கு சென்ற தொழிலாளர்களையும், சுருங்கி வரும் உள்ளூர் பொருளாதாரத்தையும் தெளிவாக காட்டுகிறது.

இந்த இந்த மோசமான நிகழ்வுக்கு மூன்று முக்கிய மான காரணங்களை நெசவு உற்பத்தியாளர்கள் எனது அலுவலகத்தில் அளித்த கோரிக்கை மனுக்களில் குறிப்பிட்டுள்ளனர்.

* பருத்தி விலை ஏற்ற இறக்கங்கள்: நெசவுத்தொழிலுக்கு அத்தியாவசியமான பருத்தியின் விலை நிலையற்றுயிருப்பது உற்பத்தியாளர்களுக்கு பெரிய சுமையை ஏற்படுத்துகிறது இதனால் மூலப் பொருட்களை அதிக விலைக்கு வாங்க வேண்டி உள்ளது.

*ஜி.எஸ்.டி.யின் தாக்கம்: உற்பத்தி பொருள்களின் மீதான ஜிஎஸ்டி வரி சிறு மற்றும் குறு நெசவாளர்களுக்கு பெரும் நிதி சுமையாகி அவர்களின் லாபத்தை பெரிதும் பாதிக்கிறது.

*பிரத்யேக ஆதரவு இல்லாமை: பாரம்பரிய நெசவுத் தொழிலாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலான பிரத்யோக ஆதரவு நடவடிக்கைகள் இல்லாதது. அவர்கள் நெசவுத்தொழிலிருந்து விலகிச் செல்ல முக்கிய காரணமாக அமைகிறது.

ஈரோட்டில் நெசவுத்தொழில் அதன் பாரம்பரியத்தையும் எதிர்காலத்தையும் வேகமாக இழந்து ஒரு நெருக்கடியான சூழலை சந்தித்துள்ளது. ஜிஎஸ்டி சீர்திருத்தம் மூலப் பொருட்களின் விலையை நிலைப்படுத்து தல் மற்றும் பாரம்பரிய நெசவு தொழிலாளர்களுக்கான பிரத்யோக ஆதரவு ஆகியவை இல்லாமல் இத் துறையை மீட்டெடுப்பது கடினம். இவற்றை ஒன்றிய அரசு உடனடியாக சரிசெய்து நிறைவேற்ற வேண்டும் என்றார்.

### வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டம்!

## தமிழ்நாடு மட்டும் வஞ்சிக்கப்படுவது ஏன்?

### மாநிலங்களவையில் — எம்.எம்.அப்துல்லா கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 25–

"வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கான வீட்டுக் கடன் திட்டத்தில் மிகக் குறைவான பயனாளர்கள் என்ற அடிப்படையில் தமிழ்நாடு மட்டும் வஞ்சிக்கப்படுவது ஏன்? – மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி எழுப்பினார்.

சமூகத்தில் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு வீட்டுக் கடன் வழங்குவதற்கான காப்புறுதி நிதி உதவித் திட்டம் தொடர்பாக, மாநில வாரியான பயனாளிகள் விவரங்கள், ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் வாரா கடன்கள் தொடர்பான தகவல்களைக் கேட்டு எம்.எம்.அப்துல்லா கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த இந்திய ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லால் அவர்கள் "இத்திட்டம் 2012ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தற்போதைய பொருளாதார சூழலைக் கருத்தில் கொண்டு 2025 ஜனவரியில் மீண்டும் புதுப்பிக்கப் பட்டு, தேசியக் கடன் காப்புறுதி நிறுவனத்திடம் இத்திட்டத்திற்கான மேலாண்மைப்பணி ஒப்படைக்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தின் கீழ், ரூ.20 லட்சம் வரையிலான வீட்டுக் கடன்களுக்கு 70% வரை காப்புறுதி வழங்கப்படுகிறது. இதுவரை தமிழ்நாட்டில் மொத்தம் 18 பேருக்கு கடன் தொகையாக ரூ.2.06 கோடி வழங்கப்பட்டுள்ளது .மாநில அளவில் மத்திய பிரதேசம், மகாராஷ்டிரசம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் மிக அதிக அளவில் பயனடைத்துள்ளன. மேலும், 45 கடன் நிறுவனங்கள், பொதுத்துறை வங்கிகள், வீட்டுக் கடன் நிறுவனங்கள் ஆகியவை புதிதாக இந்தத் திட்டத்தில் இணைந்துள்ளன. தற்போது வரை எந்தவொரு வாராக் கடனும் இந்த திட்டத்தில் இல்லை என்று பதிலளித்துள்ளார்.



கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.34க்குட்பட்ட பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கவுண்டம்பாளையம், எஸ்.கே.ஆர்.நகர் சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் சொத்துவரி பெயர் மாற்றத்திற்காக விண்ணப்பம் அளித்திருந்த பொதுமக்களுக்கு உடனடி ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் வழங்கினார். இதில் வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை ஆணையாளர் அ.சுல்தானா, மேற்கு மண்டல தலைவர் கே.ஏ.தெய்வ யானை தமிழ்மறை, கல்விக்குழு தலைவர் மாலதி நாகராஜ், மாமன்ற உறுப்பினர்கள் கிருஷ்ணமூர்த்தி, சம்பத் மற்றும் அரசு அலுவலர்கள் உள்பட பலர் உள்ளனர்.



கோவை, பீளமேடு அண்ணாநகர், மாநகர் மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் மண்,மொழி, மானம் காத்திட 'ஓரணியில் தமிழ்நாடு' வீடு வீடாகச் சென்று கழக உறுப்பினர் சேர்க்கையை, தீவிரப்படுத்துவது குறித்து ஆலோசனைக்கூட்டம் மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது. இதில் நோயல் செல்வம், சிங்கை மு.சிவா, இரா.சேரலாதன், ஏ.எஸ்.நடராஜ், துரை.செந்தமிழ்ச் செல்வன், கண்ணதாசன், சிவராமன், வழக்கறிஞர்கள் அன்புச் செழியன், முத்து விஜயன், லிங்கராஜா, சிவப்பிரகாஷ், ஜேசுதாஸ், போனஸ் பாபு, நியான் குமார், அமானுல்லா, கே.ஆனந்தகுமார், இளைஞர் அணி கமலக்கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.